வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: மலர்விழி

தேதி: 21.02.2025 நேரம்: மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

இந்தியா, உலக சக்தியாக உயர்ந்து வரும் நிலையில், நாட்டின் ஒவ்வொரு துறையிலும், ஆற்றல் மிகுந்த தலைவர்களுக்கு தேவை இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, நாளை மஹாராஷ்ட்ர மாநிலம் புனேயில், 27ஆவது மேற்கு மண்டல கவுன்சில் கூட்டத்தை, தலைமையேற்று நடத்துகிறார்.

இந்தியாவின் முதலீட்டு வாய்ப்புகளையும், இளையோர் ஆற்றலையும், முதலீட்டாளர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என, மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் வலியுறுத்தி உள்ளார்.

மத்திய சமூக நீதி அமைச்சகத்தின், கண்காணிப்புக் குழு உறுப்பினர் திரு. ஸ்ரீராம், இன்று புதுச்சேரியில், முதலமைச்சர் திரு. ரங்கசாமியை, மரியாதை நிமித்தம் சந்தித்து பேசினார்.

---

*தலைமைத்துவ மாநாடு* 1 (13)

இந்தியா, உலக சக்தியாக உயர்ந்து வரும் நிலையில், நாட்டின் ஒவ்வொரு துறையிலும், ஆற்றல் மிகுந்த தலைவர்களுக்கு தேவை இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். உலக

அளவிலான பிரச்சனைகளுக்கும் தீர்வு கண்டு, உலகின் போக்கையே மாற்றி அமைக்கக் கூடிய, உலகத் தரம் வாய்ந்த தலைவர்கள், இந்தியாவில் உருவாக வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி உள்ளார்.

பிரதமர் இன்று, புதுடெல்லி பாரத் மண்டபத்தில், SOUL என்னும் உச்ச நிலை தலைமைத்துவ பள்ளியின், உலக மாநாட்டை தொடக்கி வைத்து பேசினார். எல்லாத் துறைகளிலும், உலக அளவிலான சிறந்த நடைமுறைகளை உள்ளடக்கிய, உலகத் தரம் வாய்ந்த நிர்வாகச் சூழல் மற்றும் கொள்கை உருவாக்கச் சூழல் ஒன்றை, இந்தியாவில் உருவாக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார். பிரதமர் உரை, மற்றும் மாநாடு குறித்து, மேலும் சில முக்கிய தகவல்கள்.....

(வாய்ஸ்)

*தலைமைத்துவ மாநாடு* 2 (19)

(வாய்ஸ்)

தற்போது ஒவ்வொரு இந்தியரும், முன்னேறிய இந்தியா என்னும் இலக்குடன் கடினமாக உழைத்து வரும் நிலையில், நாட்டில், திறன்கள் மற்றும் புதுமையாக்கத்தை ஊக்குவிக்க, புதிய ஆதாரங்கள் அவசியம் என்று பிரதமர் கூறினார். நாட்டின் வளர்ச்சிக்கு, மனிதவளம் மிக அவசியம் என்றும், உலகத் தரம் வாய்ந்த தலைமையாளர்களை இந்தியாவில் உருவாக்கும் நோக்குடன், SOUL அமைப்பு நிறுவப்படுவது, முன்னேறிய இந்தியாவிற்கான பயணத்தில் முக்கிய படியாகத் திகழும் என்றும், அவர் குறிப்பிட்டார். பூட்டான் பிரதமர் திரு. ஷெரிங் டோப்கே, இந்நிகழ்ச்சியில் பேசுகையில், நிஜமான தலைமையாளர்களை உருவாக்குவதில், பிரதமர்

திரு. நரேந்திர மோடிக்குள்ள அசையாத உறுதிப்பாட்டின் அடையாளமே, SOUL தலைமைத்துவப் பள்ளி என்றார்.

இந்த 2 நாள் SOUL தலைமைத்துவ மாநாட்டில், அரசியல், அரசுக் கொள்கை, வர்த்தகம், ஊடகம், கலை, விளையாட்டு, ஆன்மீகம், மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த முக்கிய பிரதிநிதிகள் கலந்து கொண்டு, தங்களின் வாழ்க்கைப் பயணம் பற்றிய உணர்வூக்கக் கதைகளை பகிர்ந்து கொள்கிறார்கள். அரசியல் வம்சாவளியில் வந்தவர்கள் மட்டுமின்றி, தகுதியும், கடமைப்பற்றும், பொது சேவையில் ஆர்வமும் உள்ள அனைத்து இளைஞர்களையும், முறையான பயிற்சி மூலம் தலைமையாளர்களாக மேம்படுத்தும் நோக்கத்திலான SOUL தலைமைத்துவப் பள்ளி, குஜராத்தில் அமைக்கப்பட்டு வருகிறது.

----------------------

மோடி-கிசான் (12)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, வரும் திங்கட்கிழமை, பீகார் மாநிலம் பாகல்பூரில், பிரதமரின் கிசான் திட்ட பயனாளிகளுக்கான 19ஆவது தவணை நிதி உதவிகளை விடுவிக்கிறார். இத்திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு, ஆண்டுக்கு 6 ஆயிரம் ரூபாய் நிதி உதவி, 3 சம தவணைகளாக வழங்கப் படுகிறது. பாகல்பூர் விழாவில், நாடெங்கிலும் இருந்து, மொத்தம் 2 கோடியே 50 லட்சம் விவசாயிகள், நேரடியாகவும், மெய்நிகர் முறையிலும் கலந்து கொள்ள இருப்பதாக, மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சவுகான், இன்று புதுடெல்லியில், செய்தியாளர்களிடம் தெரிவித்தார். பிரதமரின் கிசான் திட்டத்தின் கீழ்,

இதுவரை மொத்தம், 3 லட்சத்து, 46 ஆயிரம் கோடி ரூபாய் நிதி உதவி விவசாயிகளுக்கு வழங்கப் பட்டுள்ளதாகவும், சிறு விவசாயிகளின் வாழ்வில், இத்திட்டத்தினால் பெரும் மாற்றம் உருவாகி இருப்பதாகவும், அவர் கூறினார்.

-----------------------

*அமித் ஷா* (13)

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, நாளை மஹாராஷ்ட்ர மாநிலம் புனேயில், 27ஆவது மேற்கு மண்டல கவுன்சில் கூட்டத்தை, தலைமையேற்று நடத்துகிறார். மேற்கு மண்டல கவுன்சிலில், மஹாராஷ்ட்ரா, குஜராத், கோவா ஆகிய மாநிலங்களும், தாத்ரா-நாகர் ஹவேலி, மற்றும், டாமன்-டையூ, யூனியன் பிரதேசமும் இடம்பெற்றுள்ளன. மேற்கு மண்டல மாநிலங்களின் உள்கட்டமைப்பு, உணவுப் பாதுகாப்பு, மற்றும், சுற்றுச் சூழல் பிரச்சனைகள் மற்றும், பொதுவான இதர பிரச்சனைகள் குறித்து, இக்கூட்டத்தில் விவாதிக்கப்படும். மாநிலங்களுக்கு இடையில், ஒத்துழைப்பு-போட்டி உணர்வு இரண்டையும் உள்ளடக்கிய கூட்டாச்சி இருந்தால்தான், மொத்தத்தில் நாடு வளர முடியும் என, பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தி இருப்பதும், இதை நிறைவேற்றும் வகையிலான முக்கிய அரங்காக, மாநிலங்களுக்கு இடையிலான சபைகள் திகழ்வதும் குறிப்பிடத்தக்கது.

-----------------------

தூர்தர்ஷன்-கும்பமேளா (10)

மஹா கும்பமேளா நடைபெறும் பிரயாக்ராஜில், 4ஆம் செக்டார் பகுதியில் அடங்கியுள்ள கும்பவாணி ஒலிபரப்பு நிலையத்தை, தூர்தர்ஷன் தலைமை இயக்குநர் திருமதி காஞ்சன் பிரசாத், இன்று நேரில் சென்று பார்வையிட்டார். ஆன்மீகம், கலாச்சாரம், மற்றும், நம்பிக்கையின் சங்கமமாகவே, மஹா கும்பமேளா திகழ்வதாகவும், மஹா கும்பமேளாவின் இந்த தெய்வீகச் செய்தியை, ஒவ்வொருவர் உள்ளத்திற்கும் எடுத்துச் செல்வதற்கான முக்கிய ஊடகமாக கும்பவாணி செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். கங்கை-யமுனை-சரஸ்வதி நதிகளின் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடும் பக்தர்கள், ஆன்மீக அமைதி மற்றும் புது ஆற்றலால் நிறைக்கப் படுவதாக, அவர் மேலும் குறிப்பிட்டார்.

----------------------

கும்பமேளா கல்வி (11)

பிரயாக்ராஜில் நடைபெறும் மஹா கும்பமேளாவில், பக்தி மற்றும் ஆன்மீகத்திற்கு அப்பாற்பட்டு, கல்விக்கும் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப் படுகிறது. கும்பமேளா தொடர்பான பல்வேறு பணிகளுக்காக, நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் இருந்து, பிரயாக்ராஜ் வந்த தொழிலாளர்களின் குழந்தைகள், கல்வி தடைபடாமல் தொடர்ந்து பயில ஏதுவாக, உத்தரபிரதேஷ் அரசு, விழாப் பகுதியின் அனைத்து மண்டலங்களிலும், வித்யா கும்பம் என்ற பெயரில், தனிப் பள்ளிகளை அமைத்து, இலவச கல்வி அளித்து வருகிறது. குறிப்பாக பெண் குழந்தைகளுக்கு, இப்பள்ளிகளில் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்

படுகிறது. இதனால் பெற்றோர்களும், நிம்மதியாக வேலைக்குச் செல்ல முடிவதாக, சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

-----------------------

*பியூஷ் கோயல்-முதலீடு (17)*

இந்தியாவில் தற்போதுள்ள முதலீட்டு வாய்ப்புகளையும், பயிற்சி பெற்ற, தரமான, இந்திய இளைஞர்களின் ஆற்றலையும், முதலீட்டாளர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என, மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் வலியுறுத்தி உள்ளார். இன்று கொச்சியில், இன்வெஸ்ட் கேரளா-உலக உச்சி மாநாட்டில் உரையாற்றிய அவர், இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, தற்போதுள்ள 4 ட்ரில்லியன் டாலர் என்ற அளவில் இருந்து, அடுத்த சில ஆண்டுகளில், 35 ட்ரில்லியன் டாலராக அதிகரிக்கும் என்றும், இதனால், பொருளாதார வாய்ப்புகள் பல மடங்கு பெருகும் என்றும் கூறினார். முதலீட்டாளர்களை ஈர்க்க, தற்போது ஒட்டுமொத்த இந்தியாவும், ஒத்துழைப்பான கூட்டாச்சி உணர்வுடன் பாடுபட்டு வருவதாக, அவர் தெரிவித்தார். முன்னதாக கேரள முதலமைச்சர் திரு. பினரய் விஜயன், முதலீட்டாளர்கள் உச்சி மாநாட்டை தொடக்கி வைத்து பேசுகையில், முதலீட்டாளர்களை பெருமளவில் ஈர்க்க, கொள்கை உருவாக்கம் முதல், கடைசி கட்ட அமலாக்கம் வரை, எல்லா நிலைகளிலும், பெருமளவிலான மாற்றங்களை கொண்டு வந்து இருப்பதாக தெரிவித்தார். இந்தியா மற்றும் பல்வேறு நாடுகளில் இருந்து, வர்த்தகத் தலைவர்கள் மற்றும் தூதரக அதிகாரிகள், இந்த 2 நாள் மாநாட்டில் பங்கேற்றுள்ளனர்.

-----------------------

*மும்மொழிக் கொள்கை (16)*

தமிழ் மொழி மற்றும் கலாச்சாரத்தை உலகெங்கிலும் பரப்ப, மத்திய அரசு உறுதிப்பாடு கொண்டுள்ளதாக, மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார். எனவே, தமிழக அரசு, கல்வியை அரசியலாக்காமல், மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும் என, இன்று முதலமைச்சர் திரு. முக. ஸ்டாலினுக்கு எழுதி உள்ள கடிதத்தில் அவர் கூறியுள்ளார். தேசிய கல்விக் கொள்கையில், எந்தவொரு மொழியும் திணிக்கப் படவில்லை என்றும், பிஜேபி அல்லாத கட்சிகள் ஆளும் பல மாநிலங்களும், தேசிய கல்விக் கொள்கையை ஏற்றுள்ளதால், மத்திய அரசின் முற்போக்குக் கல்வி சீர்திருத்தங்களை, குறுகிய பார்வையுடன் காண்பது சரியல்ல என்றும், அவர் கூறியுள்ளார்.

இதற்கிடையே, தமிழக பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, இன்று திருச்சியில், செய்தியாளர்களிடம் பேசுகையில், தேசிய கல்விக் கொள்கையால் மாணவர் இடைநிற்றல் அதிகரிக்கும் என்றும், இளைய சமுதாயத்திற்காக இக்கொள்கை உருவாக்கப்பட்டு இருந்தால், மத்திய அரசு, நிபந்தனைகளை விதிக்கக் கூடாது என்றும் கூறினார்.

----------------------

*புதுச்சேரி சந்திப்பு (5)*

மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சகத்தின், மத்திய கண்காணிப்புக் குழு உறுப்பினர் திரு. ஸ்ரீராம், இன்று புதுச்சேரியில், முதலமைச்சர் திரு. ரங்கசாமியை, மரியாதை

நிமித்தம் சந்தித்து பேசினார். முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பின் போது, சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம் உடன் இருந்தார்.

-----------------------

*அரவிந்தர்-அன்னை* (8)

புதுச்சேரி அரவிந்தர் ஆசிரமத்தில் இன்று நடைபெற்ற அன்னையின் 147ஆவது பிறந்த நாள் விழாவில், நாடு முழுவதிலும் இருந்து, ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு, கூட்டு தியானம் செய்தனர். ஆசிரம வளாகத்தில் அன்னை வசித்த அறை, இன்று பக்தர்களின் தரிசனத்திற்கு திறந்து வைக்கப்பட்டு இருந்தது. வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டு இருந்த அன்னையின் சமாதியை, பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து வழிபட்டனர். அன்னை பிறந்தநாளை ஒட்டி, ஆசிரமப் பகுதியில், பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன.

-----------------------

*காரைக்கால்-மீனவர்* (18)

காரைக்காலில், 11 மீனவர் கிராம பஞ்சாயத்தாருடன், இன்று, மாவட்ட ஆட்சியர் திரு. சோம சேகர அப்பாராவ் நடத்திய கூட்டத்தை தொடர்ந்து, மீனவர்கள் தற்காலிகமாக, போராட்டங்களை ஒத்தி வைக்க ஒப்புக் கொண்டுள்ளனர். இலங்கைக் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த காரைக்கால் மீனவரை, மேல் சிகிச்சைக்காக இந்தியாவிற்கு அழைத்து வர, மத்திய-மாநில மற்றும் காரைக்கால்

மாவட்ட நிலையில் பல்வேறு முயற்சிகள் எடுக்கப் படுவதாகவும், வரும் 24ஆம் தேதி, நீதி விசாரணையின் போது, சாதகமான அறிவிப்புகள் வரும் என எதிர்பார்க்கப் படுவதாகவும், மாவட்ட ஆட்சியர் பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். புதிய துறைமுகம் கட்ட, டெண்டர் விடப்பட்டுள்ளதாகவும், வரும் மார்ச் மாத இறுதியில் அல்லது ஏப்ரல் முதல் வாரத்தில் பூமி பூஜை நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார். முன்னதாக, காரைக்கால் மேடு சுனாமி குடியிருப்பில், வடிகால் வசதியுடன் புதிய சாலை அமைக்கப்பட உள்ள இடங்களை, மாவட்ட ஆட்சியர் நேரடியாக பார்வையிட்டு, பணிகளை விரைவாக தொடக்க, அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். இப்பணிகளுக்கு, புதுச்சேரி மாநிலங்களவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து, 1 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

என்சிசி (9)

என்சிசி மாணவர்களை, இந்திய ராணுவத்தில் அதிகாரிகளாக சேர்த்துக் கொள்வதற்கான சிறப்பு நுழைவுத் திட்டப் படிப்பிற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப் பட்டுள்ளன. என்சிசி சீனியர் பிரிவில், 2 அல்லது 3 ஆண்டுகள் சேவை புரிந்து, தேசிய மாணவர் படையின் C சான்றிதழ் தேர்வில், குறைந்தபட்சம் B grade தகுதியும், பட்டப் படிப்பில், குறைந்தபட்சம் 50 சதவிகிதம் மதிப்பெண்ணும் பெற்றுள்ள ஆண்-பெண் பட்டதாரிகள், வரும் மார்ச் 15ஆம் தேதிக்குள், இணைய தளம் மூலமாக

இதற்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர்கள், 19 முதல், 25 வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

-----------------------

*பிஜேபி-காங்கிரஸ்* (12)

நாட்டின் தேர்தல் நடைமுறைகளில் குறுக்கிட, அந்நிய சக்திகளின் ஆதரவை காங்கிரஸ் நாடுவதாக, பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது. புதுடெல்லியில் உள்ள பாரதீய ஜனதா தலைமையகத்தில், அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. கவுரவ் பாட்டியா, இன்று இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசுகையில், சொந்த முயற்சியால் பிரதமர் திரு. நரேந்திர மோடியை தோற்கடிக்க காங்கிரஸ் கட்சியால் முடியாது என்பதே, அந்நிய சக்திகளை நாடக் காரணம் என்றார். இதற்கிடையே மூத்த காங்கிரஸ் தலைவர் திரு. பவன் கேரா, புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில், திரு. நரேந்திர மோடி அரசின் ஸ்திரத் தன்மையை குலைக்க, 21 மில்லியின் டாலர் பெறப்பட்டதாகக் கூறப்படுவது, பொய்யான தகவல் என்றார். இந்த பணம், வங்கதேசத்தைச் சேர்ந்த அரசு சாரா அமைப்புகளுக்கே சென்றுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

-----------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

இந்தியா, உலக சக்தியாக உயர்ந்து வரும் நிலையில், நாட்டின் ஒவ்வொரு துறையிலும், ஆற்றல் மிகுந்த தலைவர்களுக்கு தேவை இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, நாளை மஹாராஷ்ட்ர மாநிலம் புனேயில், 27ஆவது மேற்கு மண்டல கவுன்சில் கூட்டத்தை, தலைமையேற்று நடத்துகிறார்.

இந்தியாவின் முதலீட்டு வாய்ப்புகளையும், இளையோர் ஆற்றலையும், முதலீட்டாளர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என, மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் வலியுறுத்தி உள்ளார்.

மத்திய சமூக நீதி அமைச்சகத்தின், கண்காணிப்புக் குழு உறுப்பினர் திரு. ஸ்ரீராம், இன்று புதுச்சேரியில், முதலமைச்சர் திரு. ரங்கசாமியை, மரியாதை நிமித்தம் சந்தித்து பேசினார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது